# NEWBEC

NEW WAY OF BEING CHURCH | பொதுக்காலம் ஆண்டின் 2 ஆம் ஞாயிறு | 18 ஜனவரி 2026


கிறிஸ்தவ ஒற்றுமைக்காக இறைவேண்டல் ஞாயிறு

**ஒன்றித்தப் பயணம் மற்றும் இறைவாக்கு உரைக்கும் திருஅவையை நோக்கி ஒன்றித்து நடத்தல்**

*மறைத்தூதுரைக்கும் சீடத்துவத்திற்கான மக்கள்*

மாதாந்திர நோக்கம்: குடும்பம்: நம்பகத்தன்மையைக் கட்டியெழுப்புதல்

# கிறிஸ்துவின் ஊழியப் பணியின் விரிவாக்கம்

திருவழிப்பாட்டு நாட்காட்டியில் நாம் பொதுகாலத்தில் பயணிக்கும்போது, எசாயா தொடர்ந்து தன்னுடைய இறைவாக்கு அறிவிப்பில் பணி செய்யும் ஊழியனாக கிறிஸ்துவைக் காட்டுகிறார். எசாயாவின் வாசகத்தில் ஆண்டவரின் ஊழியனின் பாடலை நாம் காண்கிறோம். இது அனைத்து இஸ்ரயேலைப் பற்றியதாகத் தொடங்குகிறது. ஆனால் அதற்கு அப்பாலும் பெரிதாகக் காணப்படுகிறது. ஆண்டவர் கூறுகிறார், இஸ்ரயேலில் காக்கப்பட்டோரைத் திருப்பிக் கொணர்வதற்கும் நீ என் ஊழியனாக இருப்பது எளிதன்றோ? உலகம் முழுவதும் என் மீட்பை அடைவதற்கு நான் உன்னைப் பிற இனத்தாருக்கு ஒளியாக ஏற்படுத்துவேன்".



முழு உலகத்திற்கும் மீட்பைக் கொண்டுவர இஸ்ரயேலைத் தம்முடைய ஊழியனாக அறிவிப்பது என்பதே கடவுளின் திட்டம். ஆண்டவருடைய மாட்சி உலகிற்கு வெளிப்படுத்தப்படும் வகையில், இஸ்ரயேல் ஆண்டவருடன் ஒரு உடன்படிக்கை உறவில் வாழ அழைக்கப்படுகிறது. இருப்பினும் காலப்போக்கில் இஸ்ரயேல் நாடு கடவுளின் அழைப்புக்கேற்ப வாழத் தவறிவிடுகிறது. அவர்கள் பிற இனக் கலாச்சாரத்தோடு ஒன்றிணைந்துவிடுகிறார்கள். சிலை வழிபாட்டைப் பின்பற்றுகிறார்கள். மேலும் தாங்கள் செய்து கொண்ட உடன்படிக்கையின்படி கடமைகளை நிறைவேற்றவில்லை.

நற்செய்தியில் திருமுழுக்கு யோவான் வருகிறார். அவர் இயேசுவை 'இதோ கடவுளின் செம்மறி' என்று சுட்டிக்காட்டுகிறார். ஆடுகள் பலிக்குரிய விலங்குகள். இயேசு உண்மையான மற்றும் நம்பிக்கையுள்ள இஸ்ரயேலர். இஸ்ரயேலரின் அழைப்பை உள்ளடக்கி இதை நிறைவேற்றுகிறார். இயேசுவின் பொது ஊழியத்தின் தொடக்கத்திலிருந்தே, திருமுழுக்கு யோவான் இயேசுவின் தியாகம் நிறைந்த பணியை, உலகத்தின் பாவங்களைப் போக்கும் கடவுளின் செம்மறி என்று சுட்டிக்காட்டுகிறார்.

**திருமுழுக்கின் வழியாக, நாம் கிறிஸ்துவின் உடலோடு இணைக்கப்படுவதால் இயேசுவின் ஊழியர்-பணியில் நமது பங்கு என்ன?**

முதலில் குடும்பம் என்பது ஒரு சமூக நிறுவனம் மட்டுமல்ல, அது ஒரு தலத்திருஅவை என்பதை நாம் அறிவோம். இவ்வாறு, குடும்ப வாழ்க்கைக்கு அழைக்கப்பட்டவர்களுக்கு ஒரு முதன்மை அழைப்பு உள்ளது. நாம் தன்னலத்தை வெறுத்து, பிறருக்காக வாழக் கற்றுக்கொள்ளும்போது, நாம் நம் குடும்பங்களில் ஒளியாக மாறுவோம். எந்தவொரு வெளிப்புற பணி செய்வதற்கும் முன் குடும்பத்தில் புனிதத்தை நோக்கியும் குறிப்பாக உறவுகளுக்கிடையே மனமாற்றத்தையும் கொண்டுவருவோம்.

பின்னர், நாம் முன்மாதிரியான வாழ்க்கையை வாழக் கற்றுக்கொள்ளும்போது, ஆண்டவர் நம்மை நம்முடைய வசதியான நிலையிலிருந்து வெளியே அழைத்து, 'இது மிகவும் எளிதானது" என்று நம்மைத் தூண்டி, ஒளியை நமக்குள்ளே தக்கவைத்திருப்பார். அதன் பலனாக, தூய ஆவியார், நம் குடும்பங்கள், பணியிடங்கள், பள்ளிகள், அதிச மற்றும் சமூகங்களையும் தாண்டிச் செல்ல நம்மை வழிநடத்துவார். யோவானுக்கு ஒரு முக்கிய பங்கு இருந்தது - அனைவருக்கும் கடவுளின் செம்மறியைச் சுட்டிக்காட்டினார். நமக்கும் ஒரு முக்கிய பங்கு உண்டு.. நம்முடைய வார்த்தைகள், செயல்களாலும் மக்களை கடவுளின் செம்மறியிடம் சுட்டிக்காட்டி வழிநடத்தவேண்டும். அவ்வாறு செய்வதன்மூலம் நாம் நம்பகமான சாட்சிகளாக மாறுகிறோம்.

**இன்றைய இறைவார்த்தை:**
எசாயா 49: 3, 5-6
திருப்பாடல் 40: 2,4,7-10
1 கொரிந்தியர் 1: 1-3
யோவான் 1: 29-34

அன்பு, நம்பிக்கை மன்னிப்பு மற்றும் புரிதல் ஆகிய பரிசுகளைப் பரிமாறிக்கொள்ள நாம் கற்றுக் கொள்ளும் இடங்களாக குடும்பங்கள் உள்ளன. நம்முடைய தேவைகள் செவிமடுக்கப்படவும், கேட்கும் திறனை நாம் கண்டறியும் இடங்களாகவும் அவை இருக்கின்றன
(இறுதி ஆவணம் எண்35)


INTERNAL CIRCULATION ONLY
BUL 03/2026

**Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org